## பள்ளி மாணவர்கள் பகுதி 1 – ல் தமிழ்ப்பாடத்தைப் பயில நடவடிக்கை மேற்கொள்ளுதல் – பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை இயக்குநரின் செயல்முறைகள் –சென்னை –06
**ந.க.எண் 72718 / சி5/இ2/2014 நாள் 14/10/2014**

பொருள்: தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் – 2006 பள்ளி மாணவர்கள் பகுதி 1 – ல் தமிழ்ப்பாடத்தைப் பயில நடவடிக்கை மேற்கொள்ளுதல் – சார்பு

பார்வை:

1. அரசாணை (நிலை எண்) : 88 பள்ளிக் கல்வி (யு2) துறை நாள்: 19/06/2006
2. சென்னை – 6 பள்ளிக்கல்வி இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்: 108044 / பிடி7/2001 நாள்: 23/06/2006
3. சென்னை 6 பள்ளிக்கல்வி இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்: 95204 /கே /இ3 /2010 நாள்: 19/08/2011
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள்: 03/06/2014. 30/04/2015 மற்றும் 05.2015

–––––

தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம்–2006 ன் படி தமிழகத்தில் பள்ளிக்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அனைத்து வகைப் பள்ளிகளிலும் 2006–2007 ஆம் ஆண்டு முதல் பகுதி 1 ல் தமிழ் பாடத்தைக் கட்டாயமாகப் பயில வேண்டும் என நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின் படி 2006/07 ஆம் கல்வியாண்டில் முதல் வகுப்பில் துவங்கி படிப்படியாக அடுத்து வரும் கல்வியாண்டுகளில் அடுத்தடுத்த வகுப்புகளுக்கு பகுதி 1 ல் தமிழ் மொழி பாடத்தை கட்டாயமாக கற்பிக்கப்பட்டு 2015 –2016 ம் கல்வியாண்டில் 1 ஆம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை பகுதி –1 ல் தமிழ் மொழிப் பாடத்தை மட்டுமே கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என்பது சார்ந்து தொடர்ந்து பல்வேறு சுற்றறிக்கைகள் முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்பொருள் குறித்து மொழிவழிச் சிறுபான்மை அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளை பார்வையிட்டு அனைத்து மாணவ மாணவியரும் தமிழ் மொழிபாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வலியுறுத்திட வேண்டும்.

2015–2016 ல் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் பகுதி 1 ல் தமிழ் பாடம் எழுதவுள்ள சிறுபான்மை மொழியைத் தாய்மொழியாக கொண்ட மாணவர்கள் பயிலும் அனைத்து மாணவ மாணவியரும் தமிழ் மொழிப் பாடத்தில் தேர்ச்சி பெறும் வகையில் மாநிலக் கல்வியில் ஆராய்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச கற்றல் கையேடு ( Minimum Learing material) வழங்கி சிறப்பு பயிற்சிகள் நடத்திடும் வகையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் விபரத்தினை அனைத்து வகைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் பள்ளி தாளாளர்கள் கவனத்திற்கு மீண்டும் கொண்டு செல்ல அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தொிவிக்கப்படுகிறது. இப்பொருள் சார்ந்து பள்ளிகளை ஆய்வு செய்து நடப்பு 2015 – 2016 ஆம் கல்வியாண்டில் 1 முதல் 10 வகுப்புகளில் பகுதி –1 ல் தமிழ் மொழிப்பாடம் கற்பிப்பதையும், அனைத்து மாணவ மாணவியரும் அதிக மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெறுவதையும், உறுதிப்படுத்திட அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஒ. ம் )ச.கண்ணப்பன்
பள்ளிக்கல்வி இயக்குநர்